மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Teaching of Kalithogai about the Virtue of Life

Dr. D. Mary Arockiya Cletus Kala

Associate professor, Department of Tamil, Sindhi College of Arts and Science, Chennai, India

Manuscript ID : **MT127A0094**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 23.10.2022
Revised: 08.11.2022
Accepted: 22.11.2022
Published: 05.12.2022

Pages : 241-250

DOI: 10.5281/zenodo.7375316

ABSTRACT:

Kalithogai is a book with various special features. The Kalithogai is the only Sangam literary work written by Calipa. Ancient Tamil people lived in harmony with nature. They have also given importance to the worship of God. The ancient people believed that a person who does not live morally will suffer in the end times. We get to know various kinds of information about God, mythological information, love life, moral life, natural welfare in the Kalithogai.

KEYWORDS:

Kalithogai, Features, Love, Mythological

கலித்தொகை உணர்த்தும் வாழ்வியல் அறம்

முனைவர் டே. மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சிந்திக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

கலித்தொகை பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட நூலாகத் திகழ்கிறது. கலிப்பாவால் அமைந்த ஒரே சங்க இலக்கிய நூலாக கலித்தொகை விளங்குகிறது. பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். கடவுள் வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அறநெறியில் வாழாத ஒருவன் இறுதிக்காலத்தில் துன்பத்தில் உழல்வான் என்னும் நம்பிக்கைப் பழங்கால மக்களிடம் வேரூன்றி இருந்தது. கலித்தொகையில் கடவுள் பற்றிய செய்திகள், புராணச் செய்திகள், தலைவன் தலைவியரின் அன்புநிலை, அறவாழ்க்கை, இயற்கை நலன் என பலவிதமான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

கருச்சொற்கள்

கலித்தொகை, வாழ்வியல், அறம், அன்புநிலை, தொன்மம்

முன்னுரை

கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று போற்றப்படும் கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் கடவுள் வாழ்த்துப்பாடல் முதலாக 150 பாடல்களைக் கொண்டுள்ளது. முதல்பாடல் கடவுள் வாழ்த்துப் பாடலும், இரண்டு முதல் முப்பத்தாறாம் பாடல்வரை பாலைக்கலியும், முப்பத்தேழாம் பாடல் முதல் அறுபத்தைந்தாம் பாடல்வரை குறிஞ்சிக்கலியும், அறுபத்தாறாம் பாடல் முதல் நூறாவது பாடல்வரை மருதக்கலியும், நூற்றி ஒன்றாம் பாடல் முதல் நூற்றி பதினேழாம் பாடல் வரை முல்லைக்கலியும், நூற்றி பதினெட்டாம் பாடல் முதல் நூற்றி ஐம்பதாம் பாடல் வரை நெய்தற்கலியும் கொண்டு இந்நூல்விளங்குகிறது.

**“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறிவழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்பனார் புலவர்”**

என்று தொல்காப்பியர் குறிப்பிடும் புலனெறிவழக்கம் என்ற சொல்லை நோக்கும் போது தொல்காப்பிய காலத்திற்கு முன்பு அகப்பாடல்கள் இருவகைப்பாக்களால்

பாடப்பட்டு வந்துள்ளன. கடைச்சங்கக் காலத்தில் யாப்பு வகையில் மாற்றம் கருதி ஆசிரியப்பாவில் பாடத் தொடங்கியுள்ளனர். எனவே சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாயாப்பில் அமைந்துள்ளன.

கலிப்பா பல உறுப்புகளைக் கொண்டது. கலித்தொகைப் பாடல்கள் சுவையான நாடகம் போன்று விளங்குகின்றன. பாலைக்கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும் மருதக்கலியை இளநாகனாரும், முல்லைக்கலியைச் சோழன்நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனாரும் பாடியுள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு திணையையும் தனித்தனிப் புலவர்கள் பாடியுள்ளனர். இதனால் ஒவ்வொரு திணைமாந்தர்களின் மன இயல்புகளும், பண்பு நலன்களும் சிறப்புற அமைந்துள்ளன. இதனை தொகுத்தவர் நல்லந்துவனார். இவரே இந்நூலின் கடவுள் வாழ்த்துப்பாடலையும் பாடியுள்ளார். இந்நூலில் மதுரையைச் சார்ந்த குறிப்புகள் அதிகம் காணப்படுகின்ற காரணத்தால் இதனை மதுரைக்கு உரிமையான நூல் என்று கூறுவாரும் உளர். இந்நூலுக்குச் சிறந்த உரை உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியரால் அமைந்துள்ளது. இதனை சி.வை. தாமோதரம்பிள்ளை முதலில் பதிப்பித்துள்ளார்.

கலித்தொகை பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட நூலாகத் திகழ்கிறது. கலிப்பாவால் அமைந்த ஒரே சங்க இலக்கிய நூலாக கலித்தொகை விளங்குகிறது. சமய சார்பற்ற இலக்கியம் சங்க இலக்கியம் என்பர். ஆயினும் சங்க இலக்கியத்தில் சமயம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. அவ்வகையில் கலித்தொகையில் கடவுள் பற்றிய செய்திகள், புராண செய்திகள், தலைவன் தலைவியரின் அன்புநிலை, அறவாழ்க்கை, இயற்கை நலன் என பல்விதமான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றின் சிறப்பு நலன்களை இக்கட்டுரை விளக்கிச் செல்கிறது.

சமய உணர்வு

பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். கடவுள் வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். குறிஞ்சிநில மக்கள் முருகனையும், முல்லைநில மக்கள் திருமாலையும், மருதநில மக்கள் இந்திரனையும், நெய்தல்நில மக்கள் வருணனையும், பாலைநில மக்கள் கொற்றவையையும் வழிபட்டனர் என்பதற்குப் பல சங்க இலக்கியப் பாடல்கள் சான்றாகின்றன. எனவே புலவர்கள் தங்கள் பாடல்களில் தெய்வங்களையும், தெய்வம் சார்ந்த செய்திகளையும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கின்றனர்.

தலைவியைப் பிரிந்து பாலை நிலம் வழியாக செல்லத் துணியும் தலைவனிடம் பாலைநில இயல்பைக் கூறுவதாக அமைந்துள்ள பாடலில் சமயம் சார்ந்த செய்திகள்

காணப்படுகின்றன. பாலைநிலத்தில் கடுமையான வெயிலால் மலைப் பிளந்து குறுக்கே வழியை அடைத்துக் கொண்டிருக்கும். அக்காட்சியானது, சிவபெருமானிடம் பிரமன் முதலான தேவர்கள் வேண்டிக்கொண்டமையால் சிவபெருமான் சூரியன் போல் சினந்து அசுரர்களின் மாயக்கோட்டையை எரித்தான். அப்போது அந்த மாயக்கோட்டை மதில் இடிந்து விழுவதைப்போல் மலை பிளந்தது என்று பின்வரும் பாடலில் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார்.

“தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந்து இரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்துஅடு முன்பொடு முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்
சீறுஅருங் கணிச்சியோன் சினவயின், அவ்எயில்
ஏறுபெற்று உதிர்வனபோல் வரைபிளந்து”, **(கலி** 2:1-7)

இப்பாடலில் சிவபெருமான் முப்புரம் எரித்த நிகழ்வு பாலை நிலத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

சூரியன் அகன்ற உலகத்தைத் தெளிவாகக் காட்டும் தம் ஒளிக்கதிர்களை வாயாகக் கொண்டு வெளிப்படுத்திய பகல் நேரத்தை அதே வாயால் மீண்டும் விழுங்கியது போல மாலையில் சூரியன் மறைந்தான். அப்போது சக்கரப்படையை உடைய திருமாலின் நிறம் போல கருமையான நிறம் படர்ந்தது என்று பின்வரும் நெய்தற்கலிப் பாடல் குறிப்பிடுகிறது.

“அகன்ஞாலம் விளக்கும்தன் பல்கதிதர் வாயாகப்
பகல்நுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
இகல்மிகு நேமியான் நிறம்போல இருள்இவர” **(கலி,** 119:1-3)

இப்பாடலில் திருமாலின் நிறம் குறிப்பிடப்படுகிறது.

“ஞாலம்மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியான் அணிபெறத் தைஇய
நீலநீர் உடைபோலத் தகைபெற்ற வெண்திரை
வால்எக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப” **(கலி,** 124:1-4)

மூன்று உலகங்களை திருமால் தன் திருவடிகளால் அளந்தவன். எல்லாப் பொருளுக்கும் முதற்காரணமானவன். அவனின் தமயனான பால்போன்ற நிறத்துப் பலதேவன் அழகாக உடுத்த நீலநிற ஆடைபோல, மணல் மேட்டினைக் கடல்நீர் பாய்ந்து

சூழ்ந்து செல்லும் என்று கூறுவதன் வாயிலாக திருமால் கண்ணனாக அவதரித்த போது பலதேவன் கண்ணனுக்கு மூத்தவனாக அவதரித்த நிகழ்வு இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

"தொல்ஊழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தால்
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண் பெயர்வான்போல்
எல்உறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர் மாய" **(கலி,** 129:1-5)

உலகிலுள்ள உயிர்களெல்லாம் பழைய ஊழிக்காலம் முதல் பிறந்தும் இறந்தும் மாறி மாறி வருகின்றன. படைக்கும் தொழில் உடைய கடவுள் மீண்டும் படைக்கும் பொருட்டு அழிக்கும் தொழில் உடைய கடவுள் அவற்றை இறப்பிக்கிறார் என்று இப்பாடல் கூறுவதன் வாயிலாகப் படைக்கும் தொழில் உடைய பிரமனும் அழிக்கும் தொழில் உடைய சிவபெருமானும் இங்கு பேசப்படுகின்றனர்.

சூரியன் மாலையில் மலையில் மறைந்ததை பின்வருமாறு கலித்தொகை உவமிக்கிறது.

"மல்லரை மறம்சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்
ஒல்லாதார் உடன்றுஓட உருத்துஉடன் எறிதலின்
கொல்யானை அணிநுதல் அழுத்திய ஆழிபோல்" **(கலி,** 134:1-3)

கம்சன் ஏவிய மல்லர்களின் வீரத்தைப் பயனின்றி நீங்கச் செய்த குளிர்ந்த தாரணிந்த மார்பனாகிய திருமால் தன்னுடன் பகைத்துப் போர் செய்த பகைவர்கள் தோற்றோடுமாறு சினத்துடன் எறிந்த சக்கரப்படை யானையின் நெற்றியில் தாக்கி அதில் அழுந்தியது என்று கூறுவதன் வாயிலாக கம்சன் அழிவு, திருமாலின் ஆழிப்படை போன்ற செய்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

செய்ந்நன்றி மறவாமை, சூள் பொய்யாமை

வாழ்வியல் அறங்களில் மேலான அறம் செய்ந்நன்றி மறவாமையும், சூள் பொய்யாமையும் ஆகும் எனக் கலித்தொகை உணர்த்துகிறது. கல்வி கற்பித்த ஆசிரியன் தன் மாணவனிடம் பொருள் ஒன்றும் பெறாது வருந்துமாறு அம்மாணவன் நன்றியின்றி நடந்துக் கொண்டால் கல்வி கற்றலில் கடமை தவறியவனாகத் தன்செயலாலேயே நலிந்து போவான். அதைப் போல தனக்குத் துன்பம் வந்த போது உதவியவனுக்கு நன்றி உணர்வோடு அவ்வுதவியைத் திரும்ப செய்யாதவன் தன் செயலாலேயே நலிந்து போவான். இங்கு செய்ந்நன்றி மறவாமை வேண்டும் என்னும் அறம் உணர்த்தப்படுகிறது.

அதைவிட மேலாக கல்வி கற்பித்த ஆசிரியன் வருந்தாதபடி பொருள் கொடுத்துக் கடமையுணர்வோடு நடந்து கொள்ள வேண்டும் என்னும் அறமும் சுட்டிக் காட்டப்படுகிறது.

"கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்
தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான், மற்றுஅவன்
எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடாதேகாண்" **(கலி,** 149:4-7)

செய்ந்நன்றி மறந்தவர்க்கு உய்வில்லை என்னும் கருத்தைப் பின்வரும் குறளும் உணர்த்துகிறது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு **(திருக்குறள்** 110)

ஒரு செயலைச் செய்து முடிப்பேன் என்று ஒருவன் சூளுரைத்துப் பின்னர் அச்செயலைச் செய்யாது விட்டால் அவன் அதன் காரணமாகவே நலிந்து போவான் என்னும் கருத்தைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றுஅவன்
வாள்வாய் நன்றுஆயினும் அஃதுஎறியாது விடாதேகாண் **(கலி,** 149:10-11)

இங்கு சூள் உரைத்தவன் பொய்த்தல் கூடாது என்னும் அறம் சுட்டப்படுகிறது.

அறமற்றவனின் நிலை

பண்டையத்தமிழரின் வாழ்வில் அறம் என்பது இரண்டறக்கலந்த ஒன்றாகும். அறநெறியில் வாழாத ஒருவன் இறுதிக்காலத்தில் துன்பத்தில் உழல்வான் என்னும் நம்பிக்கைப் பழங்கால மக்களிடம் வேரூன்றி இருந்தது என்பதைப் பின்வரும் நெய்தற்கலிப் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

அருள்தீர்த்த காட்சியான் அறம்நோக்கான் நயம்செய்யான்
வெருவுற உய்த்தவன் நெஞ்சம்போல் பைபய
இருள்தூர்பு புலம்பூஊரக் கனைசுடர் கல்சேர,
உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையால்
இரப்பவன் நெஞ்சம்போல் புல்லென்று புறம்மாறிக்
கரப்பவன் நெஞ்சம்போல் மரமெல்லாம் இலைகூம்ப **(கலி,** 120:1-6)

இப்பாடலில் பகல்மறந்து இருள்கவியும் நிலையை அறம்செய்யாதவன் நிலையோடு நல்லந்துவனார் ஒப்பிட்டுப் பேசுகிறார். அறம்செய்வது இம்மையிலும் மறுமையிலும் நன்மை தரும் என்னும் அறிவு இன்றி யாருக்கும் இரங்காமல், பண்பான நடைமுறையும் இன்றித் தன் வாள்நாளைப் பிறருக்குப் பயன்படாமல் வாழ்பவனின் மனம் இறுதியில் செய்வதறியாது கலங்கும். அதைப் போல இருள் கவிந்தது. பிறரிடம் இரப்பதற்கு அஞ்சியவன் துன்ப மிகுதியால் இரக்கத் துணிவான். அவ்வாறு இரப்பவனைக் கண்டு, இருந்த இடத்திலிருந்து எழுந்து போய் இரக்கமின்றி மறைந்துக் கொள்வான். அதுபோல இரவில் இலைகள் குவிந்தன. இங்கு அறநெறியற்றவனின் பண்புநிலையும், இறுதியில் அவனுக்கு ஏற்படும் கலக்கநிலையும் எடுத்துரைக்கப்படுகின்றன.

வாழ்வியல்அறநெறிகள்

நல்லந்துவனாரின் நெய்தற்கலிப் பாடல்கள் பொருட்செறிவு மிகுந்தவை. அவ்வகையில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள் வரிசைப்படுத்திக் கூறும் பாங்கு சிறப்புடைத்தாக விளங்குகிறது.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாமைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் **(கலி,** 133:6-14)

இங்கு நல்லந்துவனார், இல்லறத்தின் சிறப்பு வறியவர்க்கு உதவுதல், அகவாழ்வில் துணையைப் பிரியாதிருத்தல், உலக பெரியோரின் ஒழுக்கம் அறிந்து நடந்து கொள்ளுதல், தன்சுற்றத்தைத் தழுவுதல், அறிவற்றோரின் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல், முன்பு தான் கூறியதைப் பின்பு மறுக்காதிருத்தல், மறைபொருளைப் பிறர் அறியாமல் பாதுகாத்தல், ஆட்சியில் முறை செய்தல், கொலைக்குற்றம் புரிந்தோருக்கு இரக்கமின்றி மரண தண்டனை வழங்குதல், தம்மைப் பழிப்பவரைப் பொறுத்துக் கொள்ளுதல் என அறநெறிகளை அடுக்கிக்கூறுகிறார்.

தலைவன் தலைவியின் அன்புநிலை

இடன்இன்றி இரந்தோர்க்குஒன்று ஈயாமை இழிவுஎனக்
கடன்இறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்றோள் பிரியாமை பொருள் ஆயின் (கலி, 2:19-22)

இல்லை என்று இரந்தோர்க்கு ஈயாமல் இருப்பது இழிவு என்று கூறிப் பொருள் ஈட்ட மலைகடந்து பிரிந்துசெல்லுதலைவிட அருந்ததி போன்ற கற்பினை உடைய தலைவியைப் பிரியாமையேச் சிறப்புடைத்தாகும். தலைவியைப் பிரியாத அறமே ஈகை அறத்தைவிட மேலானது என்னும் கொள்கை இங்கு நிலைநாட்டப்படுகிறது,

தலைவன் தலைவியைப் பிரிதல் ஒருவர்பால் உண்ணும்போது அக்கலத்தைப் பறித்தலைப் போலக் கொடியதாகும் என்று பிரிவு துயரத்தை நல்லந்துவனார் நெய்தற் கலியில் விவரிக்கிறார். (கலி 133/16=17)

இல்லறசிறப்பு

தலைவி தலைவனுக்கு உற்ற காலத்து உதவும் துணையாகவும், என்றும் பிரியாத வாழ்க்கைத் துணையாகவும் விளங்கவேண்டும் என்னும் கருத்துப் பாலைக்கலியில் பின்வருமாறு எடுத்துரைக்கப்படுகிறது.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்குஅவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்குஅவைதாம் என்செய்யும்
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும், யாழ்க்குஅவைதாம் என்செய்யும் (கலி, 9:12-19)

சந்தனமும், முத்தும், யாழ் இசையும் அவற்றைப் பயன்படுத்துவோருக்குப் பயன்படுமேயல்லாமல் அவைபிறந்த இடத்துக்குப்பயன்படா. அதைப்போல பெண்களும் பிறந்த இடத்தில் தங்கியிராமல் கணவனுக்குப் பணிவிடை செய்ய கணவன்வீடு செல்வர் என்று கூறுவதன் வாயிலாக இங்கு பெண்கள் ஒவ்வொருவரும் திருமண வாழ்வில் தான் சிறப்படைகின்றனர் என்னும் கருத்து வெளிப்படுகிறது. அக்கால பெண்கள் தாங்கள் விரும்பும் ஆடவனைக் கணவனாக ஏற்றுக்கொண்டனர், தலைவியின் காதலுக்குத் தோழியும், செவிலித்தாயும் நற்றாயும் அறத்தோடு நிற்பர்.

சில வேளைகளில் அறத்தோடுநிலை நடவாத போது தலைவி தலைவனோடு உடன்போக்கு மேற்கொள்வாள்.

அக்காலமகளிர் தனக்குக் கணவன் வீரம் நிறைந்தவனாகவும், அஞ்சாநெஞ்சம் உடையவனாகவும் அமையவேண்டும் என்று விரும்பினர். அதனால் கொல்கின்ற காளையின் கொம்புக்கு அஞ்சும் இளையோனை ஆயர்குலத்துப் பெண் மறுமையிலும் கணவனாக ஏற்றுக் கொள்ள மாட்டாள். எப்போதும் வெறுப்பாள். வீரமிக்க இளைஞர் ஏறுதழுவி உயிர்துறப்பினும் ஆயர்குலபெண்கள் வருந்தமாட்டார்கள். கொல்லும் ஏற்றினைத் தழுவ ஊக்கமில்லாதவர்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்னும் செய்தியைக் கலித்தொகை உணர்த்துகிறது.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்
அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரா ஆயமகள் தோள் (**கலி**, 103:63-67)

விருந்தோம்பல் இல்வாழ்க்கையின் தலையாய நெறியாக விளங்குகிறது. தொல்காப்பியம் தலைவிக்குரிய மாண்புகளாக விருந்தோம்பலையும், சுற்றம்ஓம்பலையும் குறிப்பிடுகிறது.

விருந்துபுறம் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (**தொல்:கற்பியல்** -11)

அவ்வகையில் கலித்தொகையும் விருந்தோம்பலைச் சிறப்பித்துக் கூறுகிறது.

மருதக்கலி மருதத்திணையின் உரிப்பொருளான ஊடலும் ஊடல் நிமித்தமும் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆடவரின் பரத்தமை ஒழுக்கத்தால் மகளிரின் மெல்லியமனம் எவ்வாறு எல்லாம் வருந்துகிறது என்பதையும் தம் கணவரிடம் உரிமையோடு போராடுவதையும் இளநாகனார் விரிவாகப் பாடியுள்ளார். அத்தகைய பெண் ஒருத்தி தம் கோபம் தீர்வதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறுகிறாள்.

விருந்துஎதிர் கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கவித்து ஒழியும்என் புலவி (**கலி**, 75:27-29)

பரத்தையின் காரணமாகப் பிரிந்த தலைவன் மீண்டு வரும்போது விருந்தினர்களையும் ஏற்றிவருவான். அப்போது விருந்தினரைப் பேணுவதற்காக

ஊடலைக் கைவிட வேண்டியிருக்கும். ஊடல் கொண்டு பேசாமல் இருந்தால் ஊடலைத் தீர்ப்பதற்காகப் பொய்சத்தியம் செய்வான். பொய்ச் சத்தியத்தால் துன்பம் நேரும். ஊடலால் முகம் மாறி இருந்தால் தன்மகனைத் தழுவிக் கொண்டு பொய்உறக்கம் கொள்வான். இக்காரணங்களால் ஊடல் தவிர்த்தேன் என்று கூறுவதன்வாயிலாக தலைவி விருந்தோம்பலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் விளங்குகிறது.

இயற்கை நலன்

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதை கலித்தொகை நமக்கு உணர்த்துகிறது. பாலைப்பாடுவதில் வல்லவரான பெருங்கடுங்கோ பாலை நிலத்தின் கொடிய வெம்மையை உவமைகள் வாயிலாக எடுத்தியம்பும் பாங்கு சிறப்புற அமைந்துள்ளது.

வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
னுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம் (**கலி**, 10:1-7)

இப்பாடலில் பாலைநிலக் கொடுமையை மக்களின் வறுமையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். பாலை நிலத்தில் காணப்படும் மரத்தின் வாடிய கொம்புகள் வறுமையில் வாடும் இளமைப் பருவ உடலுக்கும், மரத்தை வந்தடைந்தவர்க்கு நிழல் கொடுக்காத மரத்தின் நிலையானது கொடுக்க மனம் இல்லாதவனுடைய செல்வத்திற்கும், கடுமையான வெயிலின் தன்மையால் மரம் கருகிச் வேரோடு சாய்ந்த நிகழ்வானது எல்லோருக்கும் தீங்கு செய்து பழிசேர்த்த ஒருவன் இறுதிக்காலத்தில் தன் உறவினரோடு அழிவதற்கும், பட்டுப்போன மரங்கள் நிறைந்த காடு மக்கள் வருந்தும்படியாக பொருள் தண்டும் மன்னனின் நாட்டிற்கும் உவமையாக விளங்குகின்றது. இந்த வருணனை நிலத்தின் கொடுமை, வறுமைத்துன்பம் தீயோரின் அழிவு, கொடுங்கோல் ஆட்சியின் அவலம் போன்றவற்றை உணர்த்துகிறது. இவ்வாறு கலித்தொகையில் இயற்கையோடு இயைந்த பாடல்களே அதிகம் காணப்படுகின்றன.

முடிவுரை

சங்ககாலம் முதல் இக்காலம் வரை பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சங்க இலக்கியங்கள் அறநெறிகளைப் புகுத்துவதோடு அக்காலமக்களின் அறவாழ்வியலை விவரிக்கின்றன. சங்க இலக்கிய நூலான

கலித்தொகையும் பண்டையதமிழரின் வாழ்வியலையும், அறநெறிகளையும் எடுத்தியம்புகிறது. சங்ககாலமக்கள் இயற்கையோடு இணைந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தைப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு நிலத்துக்கும் தனித்தனி தெய்வங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். கலித்தொகையும் பாலைக்கலி முதலாகக் கொண்டு திணைவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சமயம் சார்ந்த செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. கலித்தொகை உணர்த்தாத அறக்கருத்துகளே இல்லை என்னும்படியாக நூல்முழுவதும் அறக்கருத்துகளும், அறவாழ்வியலும்மிகுந்துள்ளன. அவ்வகையில் இந்நூலில் இல்லறசிறப்பு, செய்ந்நன்றி மறவாமை, சூள்பொய்யாமை, தலைவன் தலைவியரின் அன்புநிலை, வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள், விருந்தோம்பல், தலைவனின் வீரநிலை என பல செய்திகள் காணப்படுகின்றன. இந்நூலின் வழியாக அக்காலமக்கள் இயற்கையோடு இணைந்து வீரம்நிறைந்த இறவாழ்வியலை வாழ்ந்திருக்கின்றனர் என்று அறியமுடிகிறது. எனவே கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று போற்றப்படும் இந்நுநூல் இன்றுவரை போற்றப்பட்டு வருகிறது.

துணைநூற்பட்டியல்

1. கலித்தொகை, முனைவர் ,சுப. அண்ணாமலை, கோவிலூர் மடாலயம்
2. தொல்காப்பியம், முனைவர் சா.வே. சுப்பிரமணியம், மெய்யப்பன் பதிப்பகம்.
3. சங்க இலக்கிய மேற்கோள்கள். முனைவர் இரா. சாரங்கபாணி, பேராசிரியர் த. சாமிநாதன், மெய்யப்பன் பதிப்பகம்.
4. திருக்குறள், முனைவர் முகிலை இராசபாண்டியன், முக்கடல் வெளியீடு

REFERENCES

1. Kaliththogai, Dr, Suba. Annamalai, Kovilur Monastery
2. Tolkappiyam, Dr. Chave Subramaniam, Meiyappan Publishing House.
3. Quotations from Sangha literature. Dr. R. Sarangapani, Professor T. Saminathan, Meiyappan Publishing House.
4. Thirukkural, Dr. Mughila Razapandian, Released by mukkadal